பக்கங்கள்: 06
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 09 வியாழக்கிழமை 27.10.2022 கதிர் 243

## மனோ – அநுர கூட்டுப் பிரேரணை:
# நவம்பர் 8ஆம் திகதி முழுநாள் விவாதம்!




நாட்டில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியால் 8

# அரசின் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து விடாதீர்கள்!

## இறுக்கமான தீர்மானங்களை உடன் எடுங்கள் என்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் கூட்டமைப்பு வலியுறுத்து



**இலங்கை அரசு வாக்குறுதிகளை அள்ளி வீசும். ஆனால், நிறைவேற்றாது. அதுதான் இலங்கை அரசின் கடந்த காலச் சரித்திரம். எனவே, வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து விடாதீர்கள்.** 8

# நவம்பர் 14இல் பட்ஜட்டை சமர்ப்பிப்பார் ஜனாதிபதி



2023ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற, 2

# தமிழர் தீர்வு விடயத்தில் ரணில் களமிறங்கினால் பூரண ஆதரவு

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அறிவிப்பு



புதிய அரசமைப்பினூடாக தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதே நிலைப்பாட்டில் இருப்பதை நாம் வரவேற்கின்றோம். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை செயற்படுத்தும் பணியில் இறங்கினால் நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் 2

# ஐக்கிய மக்கள் சக்தியினரை அரியணை ஏற்ற மக்கள் தயார்

## சூளுரைக்கின்றார் சஜித்



மாற்று அரசாக ஐக்கிய மக்கள் சக்தி அரசை நிறுவ நாட்டு மக்கள் எந்நேரமும் தயாராகவே உள்ளனர்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மருந்தக உரிமையாளர்கள் சங்கம், மருந்தக உதவியாளர் சங்கம், அவர்களின் தொழில்முயற்சியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் பலர் கலந்துகொண்ட தேசிய மக் கள் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் 2

## பெண் பொலிஸாரிடம் பாலியல் சேட்டை விட்ட சார்ஜன்ட் இடைநிறுத்தம்

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் பயிற்சி பெறும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்களுடன் பாலியல் சேட்டை புரிந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். 2

## பருத்தித்துறை இ.போ.ச. சாலையில் இரு தரப்பினர் இடையே கைகலப்பு!

### முகாமையாளர் உட்பட 11 பேர் கைது

பருத்தித்துறை இ.போ.ச. சாலையில் கைகலப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 11 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை இ.போ.ச. சாலை முகாமையாளர் கொழும்பில் இருந்து நியமிக்கப்பட்டிருந்த நிலையில், அவரது நியமனம் தொடர்பில் சாலை ஊழியர்களிடையே முரண்பட்ட நிலைமையே காணப்படுகின்றது. 8

# பஸிலின் ஆட்டத்தை தடுக்கவே முடியாது!

## 'மொட்டு'வின் செயலர் வீறாப்புப் பேச்சு



பஸில் ராஜபக்ஷ இலங்கையில் அரசியலில் ஈடுபடுவதை எவராலும் தடுக்க முடியாது; தடை ஏற்படுத்தவும் முடியாது.

– இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர 2

# 7 தமிழக மீனவர்கள் நெடுந்தீவில் கைது!



இலங்கைக் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஏழு தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றிரவு சட்டவிரோதமாகப் படகு ஒன்றில் நுழைந்து 7 தமிழக மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே, அப்பகுதியில் சுற்றுக்காவல் (ரோந்து) பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் 2

## ஐக்கிய மக்கள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கூடியது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருந்துப் பற்றாக்குறைக்கு முக்கியக் காரணம் டொலர் தட்டுப்பாடும், இறக்குமதி முறையின் பிரச்சினையும் ஆகும். பண்டோரா பத்திரங்களில் குறிப்பிட்டுள்ளபடி நாடு இழந்த பில்லியன் கணக்கான டொலர்களை கொண்டு வருவதே இந்த டொலர் பிரச்சினையைத் தீர்க்க சிறந்த தீர்வாகும். அவ்வாறு இல்லாமல் சீனா, இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளிடமிருந்து கடன் பெறவதல்ல.

இதன் மூலம் மருந்துத் தட்டுப்பாடு மட்டுமின்றி, நாட்டின் டொலர் நெருக்கடிக்கு தீர்வு கிட்டும். இது தனிநபர்களைக் குறிவைப்பதன் மூலம் அன்றி, மாறாக தவறு செய்த மற்றும் திருடிய, கொள்ளையடித்த, அரச வளங்கள் மற்றும் அரச சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்டு மேற்கொள்ள வேண்டும். இந்தப் பணமும் சொத்துக்களும் 220 இலட்சம் பொதுமக்களின் சொத்து ஆகும்.

ஆனால், தற்போதைய அரசு அந்த வழியைப் பின்பற்றுமா என்பது ஒரு பிரச்சினைக்குரிய விடயம் என்றாலும், எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அரசின் கீழ், திருடப்பட்ட பணம் அனைத்தும் தெளிவான, வெளிப்படைத் தன்மையுடனும் பொறுப்புடனும் தொடர்புடைய அனைத்து வளங்களும் மீட்கப்படும்.

நாட்டில் தற்போது நிலவும் மருந்துப் பற்றாக்குறையைத் தீர்க்க எதிர்க்கட்சியில் இருந்தும் பெரிய வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் இதுவரை 165 மில்லியன் பெறுமதியான வைத்தியசாலை உபகரணங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன – என்றார்.

## நவம்பர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரை இடம்பெறும். மறுநாள் முதல் பட்ஜட் மீதான விவாதம் ஆரம்பமாகும்.

## பஸிலின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரியவசம் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ச நாடு திரும்பிய கையோடு கட்சியை வெற்றிகரமாக வழிநடத்துவார். இரட்டைக் குடியுரிமை தடை மூலம் அவரின் பயணத்துக்குக் கடிவாளம் பூட்ட முடியாது.

அவருக்கு எம்.பி. பதவி முக்ககியமில்லை. அதனால்தான் முன்கூட்டியே அவர் பதவி துறந்தார் – என்றார்.

## பெண் பொலிஸா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபரான சார்ஜண்ட் ஆரம் பகட்டமாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திலிருந்து வேறு பொலிஸ் சோதனைச் சாவடிக்கு மாற்றப்பட்டார். அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் அவர் கைது செய்யப்பட்டு சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான பொலிஸ் சார்ஜன்டின் பாலியல் சேட்டைகள் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர் தீர்வு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா. சம்பந்தன் தெரிவித்தார். 'தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும். ஒரு வருடத்துக்குள் இந்தப் பணிகள் முற்றுப்பெற வேண்டும் என்பதே எனது நோக்கம்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

அதேவேளை, 'தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குக் கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தவறவிடக்கூடாது. அவர்கள் கட்சி, பேதமின்றி மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட வேண்டும்' என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன வலியுறுத்தியிருந்தார். இவர்கள் இருவரினதும் கருத்துக்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

புதிய அரசமைப்பை உருவாக்கவும், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் இணைந்து பயணிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்நேரமும் தயாராகவே உள்ளது.

ஆனால், இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை உடனடியாகச் செயற்படுத்தும் பணியில் இறங்க வேண்டும். அப்போதுதான் எமக்கும் அதில் பூரண நம்பிக்கை ஏற்பட்டு முழு ஆதரவை வழங்க முடியும்.

காலத்தை இழுத்தடிக்காமல் ஒரு வருடத்துக்குள் தமிழர்களுக்கு நிலையான தீர்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கினால் அவர் இலங்கை வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பிடிப்பார் – என்றார்.

## 7 தமிழக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டனர். அவர்கள் மயிலிட்டி கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சுமந்திரனின் உரை

நாடாளுமன்றத்தில் சுமந்திரன் ஆற்றிய உரை ஒன்று பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. அந்த உரை குறித்து கடந்த வாரம் இப்பத்தியில் 'உயர்(விழுந்த) நீதிமன்றம்' என்ற தலைப்பில் விவரித்திருந்தோம்.

**"கற்றறிந்த நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றத்தின் இரட்டை வேடப் போக்கையும் அவர் நேற்று ஒரு பிடி பிடித்தார். அரசியல்வாதிகளைக் கொண்ட நாடாளுமன்றம் மட்டுமல்ல படித்தறிந்த நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றமும் ஊசலாடுவது போன்று, மாறி மாறி கருத்துரைப்பது நீதித்துறையின் பேரபத்தம் என்றார் சுமந்திரன்.**

**அவர்கள்(நீதியரசர்கள்) படித்தவர்களாக இருக்கலாம், ஆனால் தங்களின் நீதிமன்றத்தின் முன்னைய முடிவை வாசித்து விளங்குவதற்கு அவர்களுக்கு (நீதியரசர்களுக்கு) அறிவு இல்லை என்றால் அவர்களையும் வீட்டுக்குப் போகும்படி கூறுங்கள் என்றார் அவர்.**

**அரசமைப்புக்கு பொருள் கோடல் – விளக்கம் கூறல் – தொடர்பில் தனித்துவ அதிகாரம் உயர்நீதிமன்றுக்கே உண்டு. அந்த விடயத்தில்தான் உயர் நீதிமன்றமும் நாடாளுமன்றத்தை போல மாறி மாறி – ஒன்றுக்கொன்று முரணான – விளக்கங்கள், வியாக்கியானங்களை தந்து நாட்டையும் மக்களையும் நீதி முறைமையையும் குழப்பி அடித்திருக்கின்றது என்று கடுமையாகச் சாடினார் சுமந்திரன்."**

– இப்படி அந்த விடயத்தை குறிப்பிட்டிருந்தோம். அந்த உரை தொடர்பில் சுமந்திரனுக்கு எதிராக நாடாளுமன்ற சிறப்புரிமைகள் குழு அமைத்து விசாரிக்க வேண்டும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபாநாயகரைக் கோரியிருக்கிறார். இனி, விவகாரம் சபாநாயகரை – அவரின் ஞானத்தை – பொறுத்தது. எனினும் பின்வரும் விடயங்களை சுட்டிக் காட்டுவது பொருத்தமானது:–

- நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறப்புரிமை உண்டு. சுமந்திரன் விடயத்துக்காக நாடாளுமன்றம் அதை இலகுவில் விட்டுக் கொடுக்காது.
- இந்த உரையை சுமந்திரன் ஆற்றிய போது சபையில் நீதி அமைச்சர் விஜயதாஸ முழுமையாக இருந்து அதனை செவிமடுத்தார். உரையின் போதோ, பின்னரோ இந்த ஆட்சேபனையை அவர் எழுப்பவில்லை.
- சுமந்திரனின் உரையில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பில் உண்மை பிழை (factual error) இருப்பதாகத் தெரியவில்லை
- ஜனாதிபதி, பிரதமர், நீதியரசர்கள், பிரமுகர்களின் தனிப்பட்ட நடத்தை குறித்து விமர்சிப்பதற்குத்தான் நாடாளுமன்ற சிறப்புரிமை இல்லையே தவிர, அவர்களின் சட்டப்படியான செயற்பாட்டை விமர்சிக்க முடியாது என்ற சிறப்புரிமை தடை நாடாளுமன்றில் இருப்பதாகத் தெரியவில்லை.
- அடுத்து மிக முக்கியமான விடயம். அரசமைப்பு அதன் மிகப் பிரதான முதலாவது அத்தியாயத்தில் 'மக்களும் அரசும் இறைமையும்' பற்றி பேசுகின்றது. அதன் கீழ் மக்களின் நீதித்துறை இறைமை நாடாளுமன்றத்திடம்தான் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக 4(இ) பிரிவு கூறுகின்றது. 'மக்களின் நீதித்துறைத் தத்துவமானது சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள் மூலம் நாடாளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படும்' என்பது தெளிவாக உள்ளது. ஆக, அந்த நீதித்துறையின் செயற்பாடு குறித்து நாடாளுமன்றத்திலேயே வெளிப்படையாகப் பேச முடியாது என்றால், நாடாளுமன்றம் எப்படி அந்த இறைமையைப் பிரயோகிக்க முடியும்?

– ஆக, இந்த விடயத்தில் அரசுத் தலைமை தவறான அடியெடுத்து வைத்திருப்பதாகவே தோன்றுகின்றது.

# இரட்டைக் குடியுரிமை உடையவர் குறித்து வெளிப்படுத்தும் வழிமுறை அரசிடம் இல்லை!



## கையை விரித்தார் பந்துல

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தும் வழிமுறை அரசாங்கத்திடம் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அவர், புதிய அரசமைப்பு திருத்தத்தின் பிரகாரம் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்களை நீதித்துறையின் மூலம் கண்டுபிடிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அவருக்கு இரட்டைக் குடியுரிமை உண்டு எனக் கண்டுபிடிப்பதற்கான பொறிமுறை அரசிடம் இல்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# யால சரணாலயத்தில் விலங்குகள் துஷ்பிரயோகம்: 9 சந்தேக நபர்களும் நேற்று பிணையில் விடுதலை!

யால சரணாலயத்தில் விலங்குகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட 9 சந்தேகநபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நேற்று (புதன்கிழமை) திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோதே, அவர்களை தலா 5 லட்சம் ரூபா பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

யால சரணாலயத்தில் மிருகங்களை துன்புறுத்தும் வகையில் வாகனங்களைச் செலுத்தினர் எனப் பலர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதனையடுத்து, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 9 சந்தேகநபர்கள் பொலிஸில் சரணடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் உப தபாலதிபரின் கைப்பை கொள்ளையரால் அபகரிப்பு!

யாழ்ப்பாணத்தில் உப தபாலதிபரின் கைப்பை வழிப்பறி கொள்ளையர்களால் அபகரித்து செல்லப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

பெண் உப தபாலதிபர் தனது சைக்கிளின்; முன் கூடையில் கைப்பையை வைத்தவாறு, மகனை பின்னுக்கு ஏற்றியவாறு வீதியில் பயணித்துக்கொண்டிருந்த வேளை அவரை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இரு வழிப்பறிக் கொள்ளையர்கள், சைக்கிளின் முன் கூடையில் இருந்த கைப்பையை அபகரித்துக்கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

கைப்பையினுள், அலுவலகப் பணம், அவரின் சொந்தப் பணம் என ஒரு தொகை பணமும், முக்கிய ஆவணங்கள் சிலவும் இருந்தன என கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட மருந்துகள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன!



சீனாவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட மருந்துப் பொருள்களை ஏற்றிய இரண்டு விசேட விமானங்கள் இன்று (வியாழக்கிழமை) கொழும்பை வந்தடைந்தன.

இலங்கையில் நிலவும் மருந்துப் பற்றாக்குறையை சமாளிக்க சீனா இந்த நன்கொடையை வழங்கியுள்ளது.

அதன்படி, சீனா 180 கோடி ரூபா பெறுமதியான மருந்துகளை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

முன்னதாக, ஜுன் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் சீனாவினால் வழங்கப்பட்ட மருந்துப் பொருள்கள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு கரடியனாற்றில் கைக்குண்டு, கண்ணிவெடி மீட்பு!

மட்டக்களப்பு – கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள ஈரளக்குளம் காட்டுபகுதியில் கைவிடப்பட்டிருந்த கைக்குண்டு மற்றும் கண்ணிவெடியை புதன்கிழமை இராணுவத்தினர் மீட்டு ஒப்படைத்துள்ளனர் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

விமானப்படை புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான புதன் மாலை இராணுவத்தினருடன் விமானப்படை புலனாய்வு பிரிவினர் இணைந்து ஈரளக்குளம் காட்டுப்பகுதியில் கைவிடப்பட்டி ருந்த கைக்குண்டு ஒன்றும் கண்ணிவெடி ஒன்றையும் மீட்டு கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை இந்த பகுதி கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கொரோனாவைக் கட்டுப்படுத்த வாய் மூலமாக எடுக்கும் மருந்து

## சீனாவில் அறிமுகமாகின்றது



பீஜிங், ஒக்.27

கொரோனா வைரஸ் தொற்றின் ஆரம்பம் எனக் கருதப்படும் சீனாவில் கொரோனாவின் தாக்கம் இன்னும் முழுமையாக ஓயவில்லை. கொரோனாவை முற்றாக ஒழிக்க அந்த நாட்டு அரசு கடுமையான விதி முறைகளைக் கடைப்பிடித்து வருகிறது. குறிப்பாக மக்களுக்கு கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸைச் செலுத்துவதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இதுவரை 90 சதவீத சீனர்கள் 2 டோஸ் தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டுள்ளனர் என்றும், 57 சதவீதம் பேர் பூஸ்டர் டோஸைப் பெற்றுள்ளனர் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் பூஸ்டர் டோஸ் செலுத்திக்கொள்வதை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் ஊசியின்றி வாய் வழியாக செலுத்தும் கொரோனா தடுப்பு மருந்தை சீனா பயன்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது.

அந்த நாட்டின் வர்த்தகத் தலைநகராகக் கருதப்படும் ஷாங்காய் நகரில் நேற்று முதல் வாய் வழியாக செலுத்தும் கொரோனா தடுப்பு மருந்து மக்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்தத் தடுப்பு மருந்து, ஏற்கனவே தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு பூஸ்டர் டோஸாக இலவசமாக வழங்கப்படுகிறது. கொரோனாவுக்கு வாய் வழியாக வழங்கப்படும் உலகின் முதல் தடுப்பு மருந்து இது என்பது குறிப்பிடத்தக்கது.

# தூதரகம் என்ற போர்வையில் சீனா சட்டவிரோத பொலிஸ் நிலையங்கள்

## நெதர்லாந்தில் அமைத்தது சீனா..!




தி ஹேக், ஒக்.27

சீனா தனது ஆதிக்கத்தை பரவலாக பல்வேறு நாடுகளிலும் காண்பிக்கும் நோக்கில் பொலிஸ் நிலையங்களை பல நாடுகளிலும் அமைத்து வருகின்ற நிலையில்,நெதர்லாந்திலும் சீனத் தூதரகம் என்ற பெயரில் பொலிஸ் நிலையங்களை அமைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

சீனா 21 நாடுகளில் 54 வெளிநாட்டு காவல் சேவை மையங்களை நிறுவியுள்ளதாகவும், அவற்றில் பெரும்பாலானவை ஐரோப்பிய நாடுகளில் இருக்கின்றன எனவும் ஸ்பெயினைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் அரசு சாரா மனித உரிமைகள் அமைப்பு சமீபத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில், நாடுகடந்த குற்றங்களைச் சமாளிப்பதற்கும் சீன லைசென்ஸ்களை புதுப்பித்தல் போன்ற நிர்வாகக் கடமைகளை மேற்கொள்வதற்கும் இந்தக் காவல் சேவை மையங்கள் இருப்பதாக கூறப்படுகின்றன. ஆனால் உண்மையில் அவை சீன ஆட்சிக்கு எதிராகப் பேசுவதாக சந்தேகிக்கப்படுபவர்களை நாடு திரும்பும்படி கட்டாயப்படுத்துவதை நோக்கமாக கொண்டவை எனக் கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சீனா தங்கள் நாட்டில் சட்டவிரோதமாக இரண்டு காவல் நிலையங்களை அமைத்துள்ளதாக நெதர்லாந்து அரசு குற்றம் சாட்டியுள்ளது. தூதரக சேவைகளை வழங்குகிறோம் என்கிற பெயரில் சீன பொலிஸ் நிலையங்கள் எதிர்ப்பாளர்களை அமைதிப்படுத்த முயற்சிக்கின்றன என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்து வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், அதிகாரப்பூர்வமற்ற பொலிஸ் நிலையங்கள் இருப்பது சட்டவிரோதமானது என்றார். அதே சமயம் அப்படி பொலிஸ் நிலையங்கள் இருப்பது குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்று நெதர்லாந்தில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.



# பூமியை நோக்கி வருகின்றது ‘பைத்தான்’ ராட்சத சிறுகோள்

## ‘டெஸ்டினி பிளஸ்’ விண்கலத்தின் கண்காணிப்பில் உள்ளதாம்..!


சூரிய மண்டலத்தில் உள்ள பூமியை லட்சக்கணக்கான வால் மீன்கள், சிறுகோள்கள், விண்கற்கள் சுற்றி வருகின்ற நிலையில் இவற்றில் பெரும்பாலானவை செவ்வாய் கிரகத்துக்கும் வியாழனுக்கும் இடைப்பட்ட பகுதியில்தான் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரிய குடும்பத்தில் சுமார் ஒரு லட்சம் சிறுகோள்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளன. சூரிய குடும்பத்தின் ஆரம்பகால அமைப்பிலிருந்து எஞ்சிய, பாறை வடிவம்தான் இந்தச் சிறுகோள்கள் எனக் கூறப்படுகின்றது. அந்த வகையில், பைத்தான்’ என்ற ராட்சத சிறுகோள் பூமியை நோக்கி மிக வேகமாக வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்த சிறுகோளின் சுற்றுப்பாதை சூரியனுக்கு அருகில் உள்ளதால், கிரேக்க புராணங்களில் வரும் சூரியக் கடவுளான ஹீலியோஸின் மகனின் பெயரான பைத்தான்’ என்ற பெயர் இதற்குச் சூட்டப்பட்டுள்ளது. இந்த ராட்சத சிறுகோளானது வருகின்ற 2028ம் ஆண்டில் பூமிக்கு மிக அருகில் வர இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

பூமிக்கு மிக அருகில் பைத்தான்’ ராட்சத சிறுகோள் கடந்து செல்ல உள்ளதால் இது டெஸ்டினி பிளஸ் என்ற விண்கலத்தின் கண்காணிப்பில் உள்ளது. இந்த நிலையில், பைத்தான்’ ராட்சத சிறுகோளின் வேகம் அதிகரித்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அதன் சுழற்சி வேகமானது நான்கு மில்லி விநாடிகள் அதிகரித்திருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# உலகின் மிக அழுக்கான நபர் 94ஆவது வயதில் காலமானார்





94 வயதுடைய உலகின் மிக அழுக்கான நபர் என்று அடையாளப்படுத்தப்பட்ட ஈரானைச் சேர்ந்த நபர் உயிரிழந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ஈரான் நாட்டில் தேஜ்கா என்ற கிராமத்தில் வசித்து வந்தவர் அமவ் ஹாஜி. வயது முதிர்ந்த நபர்களை அழைக்கும் செல்லப்பெயராக அதனை உள்ளூர் மக்கள் அவருக்கு வழங்கியுள்ளனர்.

அவர், பூமியில் ஒரு பகுதியில் குழி தோண்டி அதற்குள் தூங்கி வந்துள்ளார். இதனால், கிராமவாசிகள் சேர்ந்து அவருக்காக திறந்தநிலையிலான செங்கல்லால் கட்டப்பட்ட குடிசை ஒன்றை உருவாக்கி கொடுத்துள்ளனர்.

அதிலேயே அவர் பல காலம் தனிமையில் வசித்து வந்துள்ளார். அமவ் ஹாஜி பல ஆண்டுகளாகக் குளிக்காமல் இருந்து வந்துள்ளார். இதனால், உடம்பில் அழுக்கு சேர்ந்து உள்ளது. நோய் தாக்கி விடும் என்ற அச்சத்தில் அவர் குளியல் எடுத்து கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது. அவரது இளமை காலத்தில் ஏற்பட்ட உணர்வுப்பூர்வ பின்னடைவுகளே, வித்தியாசமுடன் அவர் நடந்து கொள்ளக் காரணம் என அந்த பகுதியில் வசிப்பவர்கள் கூறுகின்றனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு, தெஹ்ரான் டைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில், ஹாஜிபுதிதாக சமைத்த உணவை தவிர்த்து விட்டார் என்றும், அவற்றுக்கு பதிலாக, அழுகி போன முள்ளம்பன்றி இறைச்சியை சாப்பிடுவதுடன், விலங்குகளின் கழிவில் இருந்து எடுக்கப்பட்ட பொருட்களை புகைக்கும் வழக்கம் கொண்டுள்ளார் என்றும் தெரிவித்திருந்தது. இந்த சூழலில், நியூயார்க் போஸ்ட் வெளியிட்டுள்ளசெய்தியில், அவரது கிராமவாசிகள் முதன்முறையாக ஒரு சில மாதங்களுக்கு முன்பு, கட்டாயப்படுத்தி அவரை குளிக்க கொண்டுசென்றுள்ளனர்.

அறுபது ஆண்டுகளுக்கும் கூடுதலாக குளிக்காமல் வாழ்ந்து வந்த அவரை குளியலறையில் வைத்து குளிப்பாட்டி உள்ளனர். இந்த நிலையில், ஹாஜி தனது கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மரணம் அடைந்து உள்ளார் என தெரிவித்துள்ளது. பல தசாப்தங்களாக குளியல் எடுத்து கொள்ளாமல் இருந்த, உலகின் மிக அழுக்கான நபர் என அறியப்படும் ஹாஜி தனது 94 ஆவது வயதில் உயிரிழந்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போக்குவரத்துக்கு அபராதம் உயர்ந்தது சென்னையில் சாரதிகள் அதிர்ச்சியில்!



சென்னை, ஒக்.27

இந்தியாவில் பெருகி வரும் வாகன போக்குவரத்துக்கு ஏற்ப வீதி விபத்துகளும் அதிகரித்து வருகிறது. அன்றாடம் வீதி விபத்துக்கள் அரங்கேறுகின்றன. உயிர்பலியும் ஏற்படுகின்றன. இவ்வாறு வீதி விபத்துகள் அதிகம் நடைபெறும் மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் இருக்கின்ற நிலையில் வீதி விபத்துகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக மோட்டார் வாகன சட்டத்தில் மத்திய அரசு

கடந்த 2019ஆம் ஆண்டு திருத்தம் கொண்டு வந்தது. இதன் மூலம் போக்குவரத்து விதி மீறலுக்கான அபராத தொகை பல மடங்கு அதிகரிக்கப்பட்டது.

இந்தஉத்தரவைமாநிலஅரசுகள் கடைபிடிக்க வேண்டும் என்று மத்திய வீதி போக்குவரத்து அமைச்சகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி தமிழகத்தில் வீதி போக்குவரத்து விதிமீறலுக்கான அபராத தொகையை பல மடங்கு உயர்த்தி தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமை செயலாளர் க.பணீந்திர ரெட்டி சமீபத்தில் அரசிதழை வெளியிட்டார்.

புதிய நடைமுறையின்படி சிறிதளவான குற்றங்களுக்கான அபராதத் தொகைகள் 100ரூபாவில் இருந்து - 1000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுடன், வாகனஓட்டுனர் அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனங்களை ஓட்டினால் ரூ.500 லிருந்து ரூ.5 ஆயிரமாகவும், மது போதையில் வாகனங்களை ஓட்டிச் செல்பவர்களுக்கும், பின்னால் அமர்ந்து செல்வோர்களுக்கும் தலா ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் எனவும் சட்டம் அமுலுக்கு வந்தது.

இந்நிலையில், சென்னையில் இந்த புதிய அபராத விதிப்பு 28 ஆம் திகதிக்கு பின்னரே நடைமுறைக்கு வரும் என்று பொலிஸ் ஆணையாளர் சங்கர் ஜிவால் அறிவித்திருந்தார்.

அதன்படி போக்குவரத்து பொலிசார் அபராதங்களை வசூலிக்கும் 'இ-சலான்' இயந்திரத்தில் பழைய அபராதத் தொகையை நீக்கிவிட்டு புதிய அபராத தொகையை பதிவேற்றும் பணி நடைபெற்றது.

மேலும், இந்த உத்தரவு 28 ஆம் திகதிக்கு பின்னர் தானே அமுலுக்கு வரும் என்ற அலட்சியத்தில் விதிகளை மீறி வாகனத்தில் சென்ற வாகன ஓட்டிகளுக்கு நேற்று முதலே அபராதம் வதிக்கப்பட்டமை அதிர்சியை உண்டாக்கியி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வறுமை, பருவநிலையால் இந்தியாவில் 22 கோடி குழந்தைகளுக்குப் பாதிப்பு'



'சேவ் த சில்ட்ரன்' என்ற குழந்தைகள் உரிமை அமைப்பும், பிரசல்ஸ் நகரில் உள்ள விரிஜே பல்கலைக்கழகமும் இணைந்து குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளன. அதில், உலகம் முழுவதும் 77 கோடியே 40 லட்சம் குழந்தைகள், வறுமையாலும், பருவநிலை நிகழ்வுகளாலும் பாதிக்கப்பட்டு வருகின்றன எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், உலக அளவில், கம்போடியாவில் வசிக்கும் குழந்தைகள்தான் வறுமை, பருவநிலை தாக்கம் என இரட்டை அச்சுறுத்தலை சந்திப்பவர்களில் முதலிடத்தில் உள்ளனர். அங்கு 72 சதவீத குழந்தைகளும், மியான்மரில் 64 சதவீத குழந்தைகளும், ஆப்கானிஸ்தானில் 57 சதவீத குழந்தைகளும் இந்த இரட்டை அச்சுறுத்தலை சந்தித்து வருகின்றனர். இந்தியாவில் உள்ள குழந்தைகளில் 51 சதவீதம் பேர், அதாவது 22 கோடியே 20 லட்சம் குழந்தைகள், வறுமையிலும், பருவநிலை நிகழ்வுகளின் பிடியிலும் வாழ்ந்து வருகிறார்கள். இந்தியாவில், 35 கோடியே 19 லட்சம் குழந்தைகள், ஆண்டுதோறும் ஏதேனும் ஒரு பருவநிலை நிகழ்வால் பாதிக்கப்படுவதாக இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

கேரளா, அசாம் போன்ற மாநிலங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கும், ஒடிசாவில்வீசும் புயலும் எண்ணற்ற குழந்தைகளை வறுமையில் தள்ளி இருக்கின்றன என குறிப்பிட்டுள்ளது. அத்துடன், உயர் வருவாய் நாடுகளிலும் 12 கோடியே 10 லட்சம் குழந்தைகள் இந்த அச்சுறுத்தலில் வாழ்ந்து வருவதாகக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## விண்வெளித்துறை மேம்பாட்டுக்கென 6 ஒப்பந்தங்களில் தமிழகம் கைச்சாத்து

சென்னை, ஒக்.27

குஜராத்தில் கடந்த 18 ஆம் திகதி முதல் ஆம் திகதி வரை பாதுகாப்பு தளவாட கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் வழித்தட நிறுவனமும் பங்கேற்றது.

விண்வெளி மற்றும் பாதுகாப்புத்துறையை வலுப்படுத்த இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ள முயற்சி மற்றும் இந்த துறையில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான திட்டம் குறித்தும் கண்காட்சி அரங்கில் விளக்கப்பட்டது. கண்காட்சியில்தமிழகத்தின் சார்பில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் மேலாண்மைஇயக்குனர் ஜெயஸ்ரீ முரளிதரன், கூடுதல் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, பிரமோஸ் விண்வெளி மையத்தின் தலைமை செயல் அதிகாரி சிவதாணு பிள்ளை, இஸ்ரோ முன்னாள் இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் 'விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை சாதனங்கள் உற்பத்தியில் உலகளாவிய அளவில் முக்கிய இடத்தில் இருக்கும் தமிழ்நாடு' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றதுடன், விண்வெளி மற்றும் பாதுகாப்புத்துறையில் புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும், மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தவும் விண்வெளி மற்றும் பாதுகாப்புத்துறை சாதனங்கள் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் பொதுத்துறை நிறுவனங்களுடன் தமிழக அரசு ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டமையும் குறிப்பிடத்தக்கது.


## இரத்தத்துக்குப் பதிலாக பழச்சாறை ஏற்றிய மருத்துவமனையை இடித்து அகற்ற உத்தரவு

உத்தரப்பிரதேசத்தில் டெங்கு நோயாளிக்கு இரத்தம் ஏற்றுவதற்கு பதிலாக சாத்துக்குடி ஜூஸ் ஏற்றிய மருத்துவமனையை இடிக்க உத்தரவுப் பத்திரம் அளிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குஈரத்தத்தில் உள்ள பிளேட்லெட்கள் எண்ணிக்கை குறைவதன் காரணமாக,நோயாளிகளுக்கு இரத்தம் மூலமாக பிளேட்லெட்கள் ஏற்றப்படும். இந்த நிலையில், உத்தரப்பிரதேசத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவருக்கு சாத்துக்குடி ஜூஸ் ஏற்றப்பட்ட விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் அந்த நோயாளி உயிரிழந்திருந்தார். அதனையடுத்து, மருத்து வமனையில் இருந்த நோயாளிகள் அனைவரும் அங்கிருந்து மாற்றப் பட்டிருந் தனர். மேலும், மருத்துவமனைக்கு சீல் வைக்கப்பட்டது.

அத்துடன், இது தொடர்பான விசாரணை தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், தற்போது அந்த மருத்துவமனைக்கு அனுமதியின்றி கட்டடம் கட்டியதற்காக, கட்டடத்தை இடிப்பதற்கு உத்தரவுப் பத்திரம் அளிக்கப்பட்டுள்ளதுடன், நாளை வெள்ளிக்கிழமைக்குள் மருத்துவமனையை முழுவதுமாக அங்கிருந்து அகற்றுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.





# மத ரீதியான கேவல அரசியல் நடத்தும் போக்கை அரசாங்கம் கைவிட வேண்டும்!

## காரைதீவு பிரதேச சபையின் மு.கா. உறுப்பினர் இஸ்மாயில் காட்டம்





(சகா தேவராஜா)

இனவாதத்தைத் தூண்டி, இனங்களைப் பிரித்து, அரசியல் நடத்தும் ஒருவித கபடத்தனமான போக்கை இலங்கை அரசுகள் மேற்கொண்டு வந்திருக்கின்றன. இவ்வாறு மத ரீதியாக கேவலமான அரசியல் நடத்துகின்ற போக்கை அரசாங்கம் கைவிட வேண்டும்.

– இவ்வாறு காரைதீவு பிரதேச சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எச் .எம்.இஸ்மாயில் தெரிவித்தார்.

திருகோணமலை ஆலய விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் சபையின் விசேட அமர்வு நடைபெற்றது. அதன் போது உறுப்பினர் இஸ்மாயில் மேலும் தெரிவிக்கையில் –

இனங்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி கபடத்தனமான அரசியலை இன்னும் தொடரக்கூடாது. பேரினவாத அரசுகள் அவ்வப்போது செய்த சூழ்ச்சிதான் இன்று இனங்கள் பிரிந்து நிற்பதற்கு காரணம். முன்னாள் ஜனாதிபதி முதலாவது பதவியேற்பின் பொழுது இனவாதத்தை மையமாக வைத்து இனவாதத்தைத் தூண்டி அரசியல் நடத்தினார்.

அதன் காரணமாக அவர் வரலாற்றில் இல்லாத படி தூக்கி வீசப்பட்டார். கடந்த அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக மாயக்கல்லி மலை, அட்டாளைச்சேனை போன்ற இடங்களிலே புத்தர் சிலைகளை வைத்து அவமதித்தார்கள். இன்று மீண்டும் தமிழ் மக்கள் மீது இப்படியான செயல்களை செய்து சீண்டி வருகிறார்கள். இவ்வாறான போக்கை உடனடியாக அரசாங்கம் கைவிட வேண்டும். – என்று கேட்டுக் கொண்டார்.

சுயேச்சை குழு உறுப்பினர் எஸ். சசிக்குமார் பேசுகையில் –

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் இவ்வாறான இனவாத செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களின் பூர்வீகத்தை இலக்கு வைத்து இன்று திருகோணமலையில் இந்த அடக்கு முறையை மேற்கொள்கிறார்கள். ஐந்து ஈச்சரங்கள் கிறிஸ்துவுக்கு முன் ஏழாம் நூற்றாண்டிலேயே தோற்றம் பெற்றிருந்தன.

அந்த வரலாற்றைக் குழி தோண்டிப் புதைக்கின்ற செயற்பாடுகளாக இவற்றைக் காண் கின்றோம். இந்தப் போக்கை உடனடியாக அரசாங்கம் கைவிட வேண்டும். – என்றார்.

# கல்லடி கிருஷ்ண சுவாமி கோவில் மகா சங்காபிஷேக நிகழ்வு நேற்று





(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு கல்லடி அருள்மிகு கிருஷ்ண சுவாமி ஆலய சங்காபிஷேகம் நேற்றுபல நூற்றுக்கணக்கான அடியவர்கள் புடைசூழ, வேதவிற்பன்னர்கள் வேதபாராயணம் இசைக்க, மேள வாத்தியங்கள் முழங்க, அடியவர்களின் அரோகரா கோசத்துடன் வெகுசிறப்பாக நடந்தேறியது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிகேப் பூசைகள் இடம்பெற்றமையை அடுத்து நேற்று சங்காபிஷேகம் நடைபெற்றது.

சங்காபிஷேகத்தை முன்னிட்டு, கல்லடி மாரியம்மன் ஆலயத்திலிருந்து பெருமளவான பெண் அடியவர்கள் பாற்குடம் ஏந்தி கல்லடி புதிய கல்முனை வீதி வழியாக மேற்படி ஆலயத்தை வந்தடைந்தனர். அதனைத் தொடர்ந்து பாமா– ருக்மணி சமேத கிருஷ்ண பகவானுக்கு அபிகேம் செய்யப்பட்டது.

சங்காபிஷேகக் கிரியைகளை நயினை பிரதிஷ்டா பூஷணம் சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் மற்றும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் வேதாகம ஞான பாஸ்கரன் சிவசிறி தானு மகா தேவ குருக்கள் ஆகியோரால் உரிய விதிப்படி மேற்கொள் ளப்பட்டன.

# மட்டு. ஒருங்கிணைப்புக் குழு தலைவர் சந்திரகாந்தன் நேற்றுப் பொறுப்பேற்பு



மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் சி.சந்திரகாந்தன் உத்தியோக பூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந் தன் உத்தியோக பூர்வமாக தனது கடமைகளைப் பொறுப் பேற்றுக்கொண்டுள்ளார்.

நேற்றைய தினம் திகதி மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்திலுள்ள அவரது உத்தியோக பூர்வ பணிமனையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவராக தனது கடமைகளை பொறுப்பேற்று, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனிடம் அதற்கான உத்தியோகபூர்வ ஆவணங்களை அவர் வழங்கினார்.

தன்னால் முடிந்த அத்தனை பணிகளையும் தனக்கு வாக்களித்து தன்னை வெற்றி பெறச் செய்த மாவட்ட மக்களுக்குச் செய்துகொடுக்க எல்லாம் வல்ல இறைவனும் இயற்கையும் துணை நிற்க வேண்டுமென இராஜாங்க அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் இதன்போது தெரிவித்துள்ளார்.

# கலப்பின சோள உயர் அடர்த்தி மாதிரி பயிர்ச்செய்கைக்கு விதை

## பாலமுனையில் வழங்கி வைப்பு

(பாறுக் ஷிஹான்)

கலப்பின சோள உயர் அடர்த்தி மாதிரி பயிர்ச்செய்கை வேலை திட்டத்தின் கீழ் சோளப் பயிர்ச்செய்கைக்கு விதை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாலமுனை விவசாய விரிவாக்கல் நிலையத்தின்(மத்திய அரசு) நிலைய பொறுப்பதிகாரி சு.விஜயராகவன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு, அம்பாறை மாவட்டம் ஒலுவில் பகுதிக்குப் பொறுப்பான தொழிநுட்பவியல் உத்தியோகத்தர் வி.நிறூன் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.எவ்.ஏ. சனீரின் வழிகாட்டலில் பாலமுனை விவசாய விரிவாக்கல் நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கான சோள விதை இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாலமுனை கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் அஸ்ரப், திகவாவி பகுதிக்குப் பொறுப்பான விவசாயப் போதனாசிரியர் சமீர், பாலமுனை பகுதிக்குப் பொறுப்பான தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் கே.குகலேந்தினி ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று வலி.வடக்கு பிரதேசசபை ஏற்பாட்டில் பேரணி!

## உறுப்பினர்களுக்கு அறிவித்தல் இல்லை எனக் குற்றச்சாட்டு











தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.வடக்கு பிரதேச சபை தெல்லிப்பழை உப அலுவலகம் மற்றும் தெல்லிப்பழை பொது நூலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து விழிப்புணர்வுப் பேரணி நேற்று (புதன்கிழமை) தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய முன்றிலில் காலை 9 மணியளவில் ஆரம்பித்து தெல்லிப்பழைச் சந்தியில் நிறைவடைந்தது.

போதைப்பொருள் பாவனையை ஒழித்தல், வாசிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல், பிளாஸ்டிக் பாவனையைக் குறைத்தல், பாலின சமத்துவத்தைப் பேணல், இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகள் இந்தப் பேரணியில் வலியுறுத்தப்பட்டன.

பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள்,சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

வலி.வடக்கு பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட தெல்லிப்பழை உப அலுவலகம், நூலகம் ஆகியவற்றால் இந்தப் பேரணி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தாலும் வலி. வடக்கு பிரதேசசபையின் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பி னர்கள் எவருக்கும் எந்த அறிவிப்பும் வழங்கப் படவில்லை என்று உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



# 60 ஆயிரம் மெற்றிக்தொன் நிலக்கரி கப்பல் செவ்வாய்க்கிழமை இலங்கை வந்தடைவு!


60 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரியுடன் முதலாவது கப்பல் கடந்த செவ்வாய்;கிழமை இரவு நாட்டை வந்தடைந்ததாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை இரண்டாவது கப்பல் எதிர்வரும் திங்கட்கிழமை வரவுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் உடனடி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கடந்த வருட நிலக்கரி ஒப்பந்தத்தில் இருந்து இவை இலங்கை வந்துள்ளன.

அதன்படி, சரக்குகளில் இருந்து கையிருப்பு மின் உற்பத்திக்காக நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்துக்கு அனுப்பப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

# நல்லூர் ஆலயச் சூழல் வீதிகள் மாலையில் ஒரு மணிநேரம் பூட்டு!



நல்லூர் கந்தசுவாமி கோவில் கந்தஷ்டி உற்சவத்தை முன்னிட்டு நல்லைகந்தன் வெளி வீதியுலா வரும் வேளையில் எதிர்வரும் 29ஆம் திகதி வரை மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரையிலும், சூரன்போர் திருவிழா வான 30 ஆம் திகதி மதியம் 12 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையிலும் 31ஆம் திகதி மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரையும்நல்லூர் ஆலய சுற்றாடலில் பக்தர்களுக்கு இடை யூறு ஏற்படாத வகை யில் வாகனங்கள் உள்நுழைய முடியாத வாறு பாதைகள் மூடப்பட்டிருக்கும். இந் நேரங்களில் மாத்திரம் வாகனங்கள் ஆலயச் சுற்றாடலைத் தவிர்த்து வழமையான மாற்றுப் பாதைகளூடாகப் பயணிக்க முடியும் என்றும் மாநகர முதல்வர் அறிவித்துள்ளர்.

# கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடை நவம்பர் 24 வரை நீடிப்பு!



*மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடை நீடிக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி எதிர்வரும் நவம்பர் 24 ஆம் திகதி வரை அவருக்கான பயண தடையை நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*அஜித் நிவாட் கப்ராலை தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.*

*தென் மாகாண முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோன் தாக்கல் செய்த மனு நேற்று (புதன்கிழமை) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*பல நிதி மோசடி சம்பவங்களில் ஈடுபட்டுள்ள அஜித் நிவாட் கப்ரால் நாட்டை விட்டு வெளியேற தடை விதிக்க கோரி அவர் மனு தாக்கல் செய்திருந்தார்.*

## அரசின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் உதாரணங்களுடன் நேரில் எடுத்துரைத்தது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு.ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை, பயங்கரவாதத் தடைச் சட்டம், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் தேர்தல்கள் தொடர்பில் கடந்த காலங்களில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை. இப்போதும் நீங்கள் வந்தவுடன் வாக்குறுதிகளை இலங்கை அரசு அள்ளிவீசும். அந்த வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து விடாதீர்கள். கடந்த காலத்தில் இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக இறுக்கமான தீர்மானங்களை எடுங்கள் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இன்று சந்தித்து முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்பு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பியின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தனுடன் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் கலந்துகொண்டார்.

இருவருமே மேற்கண்டவாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் பல முக்கிய விடயங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் விரிவாகக் கலந்துரையாடினர் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

மனித உரிமைகள் விவகாரம், பொருளாதார மீள்கட்டமைப்பு, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பவற்றை நடத்த வேண்டியதன் தேவைப்பாடு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் இதன் போது பேசப்பட்டன என்று சுமந்திரன் எம்.பி. மேலும் கூறினார்.

இதேவேளை,நாட்டின்தற்போதைய பொருளாதார நெருக்கடி, பயங்கரவாதத் தடைச் சட்டம், நல்லிணக்கம், அதிகாரப் பகிர்வு, அரசமைப்புச் சீர்திருத்தம் மற்றும் வடக்கு, கிழக்கு காணி விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினருடன் பேசினோம் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் தெரிவித்தனர். இது நல்லதொரு கலந்துரையாடல் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் மேலும் குறிப்பிட்டனர்.

## பருத்தித்துறை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமையாளருக்குச் சார்பாக ஒரு தரப்பும், வேறோருவரை நியமிக்க வேண்டும் என்று இன்னொரு தரப்பும் செயற்படுவதாலேயே இந்த நிலைமை காணப்படுகின்றது.

இந்தக் குழப்ப நிலைமையால் கோண்டாவில் பிராந்திய பணிமனையில் கையொப்பமிடுவதற்கும், அங்கிருந்த பணியாற்றவும் முகாமையாளருக்குப் பணிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் பருத்தித்துறை இ.போ.ச. சாலையில் இந்தப்பிரச்சினை தொடர்ந்தவண்ணமே இருந்தது.

இதன் தொடர்ச்சியாக முகாமையாளருக்கு ஆதரவான தரப்பு அண்மையில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. எனினும், மற்றைய தரப்பு ஆதரவு வழங்கவில்லை.

இந்தப் பிரச்சினையால் கடந்த 20 ஆம் திகதி காலை 4 மணிக்கு சேவையில் ஈடுபட்ட திருகோணமலை – பருத்தித்துறை பஸ் பணிப்புறக்கணிப்பு என்று தெரிவிக்கப்பட்டு மறிக்கப்பட்டது. ஆயினும், அதன்பின்னர் பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவளிக்க மாட்டோம் என்று தெரிவித்து ஏனைய பஸ் சேவைகள் நடைபெற்றன. திருகோணமலை – பருத்தித்துறை பஸ் சேவை மறிக்கப்பட்டால் இ.போ.ச. சாலைக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படு கின்றது.

இந்தநிலைமையில் நேற்று முகாமையாளர், பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவுக்குச் சென்றுள்ளார். அவரைக் கோண்டாவில் பணிமனையிலேயே பணியாற்றுமாறு பணிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் அங்கு வந்தமை தொடர்பாக அங்கிருந்தவர்கள் கேள்வி எழுப்பியதை அடுத்து வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அந்த வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலைத்தில் இரு தரப்பினராலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

முறைப்பாட்டுக்கு அமைய முகாமையாளர் தரப்பில் முகாமையாளர் உட்பட 4 பேரும், மற்றைய தரப்பில் 7 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் நிலையத்தில் இரு தரப்பினரையும் சமரசம் செய்ய முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை.

அதையடுத்து அவர்கள் மீது 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குப் பதிவுசெய்த பருத்தித்துறைபொலிஸார், அவர்களை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் தலா 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையிலும் செல்ல அவர்களை அனு மதித்ததுடன், கடும் எச்சரிக்கையும் செய்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடபிராந்திய இ.போ.ச. முகாமையாளர் குணபாலசிங்கம்,

சாலையில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமையை அடுத்து அங்கு செல்ல வேண்டாம் என்று முகாமையாளருக்குப் பணிக்கப்பட்டிருந்தது. எனினும், அவர் கொழும்பில் அதிகாரிகளுடன் தொலை பேசியில் உரையாடிவிட்டு அங்கு சென்றுள்ளார். உரிய அதிகாரிகளின் அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும் என்று கொழும்பில் இருந்து அவருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தபோதும், அதை அவர் கடைப்பிடிக்கவில்லை. அதனாலேயே அங்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது. உரிய அனுமதி இல்லாது அவர் இனி மேல் அங்கு செல்லக்கூடாது என்று மீண்டும் எழுத்துமூலம் அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது – என்றார்.

## நவம்பர்......

, (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வாதார துன்பங்களை மிக அதிகமாக எதிர்கொள்ளும் மிகவும் நலிந்த பிரிவினர் தொடர்பில், முழுநாள் விவாதம் ஒன்றை நடத்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியும், தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பியும் முன்வைத்த கோரிக்கையை இன்று, நாடாளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் தலைமையில் கூடிய கட்சித் தலைவர்கள் குழு ஏற்றுக்கொண்டது.

இதன்படிவரவு–செலவுதிட்டத்துக்கு முன்னர் கூடும் நாடாளுமன்ற வாரத்தின் முதலாம் நாளான நவம்பர் 8 ஆம் திகதி செவ்வாய்கிழமையன்று இந்தக் கருப்பொருளில் முழு நாள் விவாதம் நடத்த கட்சித்தலைவர்கள் குழு ஏற்றுக் கொண்டது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது பற்றி மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:-

பெருந்தோட்டத் துறை 51 விகிதம், நகரத் துறை 43 விகிதம், கிராமியத் துறை 34 விகிதம் என்ற ஐ.நா. நிறுவனங்களின் கணக்கெடுப்பின்படி, கடந்தவாரம், இந்நாட்டின்மிகமோசமான நெருக்கடியை சந்தித்துள்ள பெருந்தோட்டத் துறை மக்களின் வாழ்வாதார விவகாரங்கள் தொடர்பில், ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை, நான் கொண்டு வந்து விவாதத்துக்கு உள்ளாக்கி இருந்தேன்.

நாட்டில் வாழும் அனைத்து நலிந்த பிரிவினர்கள் தொடர்பில் கூட்டாகப் பிரேரணை கொண்டுவந்து முழுநாளும் விவாதிப்போம் என்ற யோசனையை ஜே.வி.பியின் தலைவர் நண்பர் அநுர குமார திஸாநாயக்கவும், நானும் அதன்பின் பேசி முடி செய்தோம்.

இதன்படி இன்று அநுரகுமார திஸாநாயக்க அதுபற்றி கருத்திட, அதை நான் ஆதரிக்க கட்சித் தலைவர்கள் தற்போது எமது கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளது.

இதன்படி கணக்கெடுப்புகளின்படி மிக அதிகமாக துன்புறும் நலிந்த பிரிவு குடும்பங்கள் தொடர்பாக முழு தேசமும், உலகமும் அறிந்துகொள்ளும் வண்ணம் நமது பிரேரணை அமையும்.

பெருந்தோட்ட உழைக்கும் குடும்பங்கள், நாளாந்த வருமான நகர பாமர குடும்பங்கள், மீனவ குடும்பங்கள், விவசாய குடும்பங்கள், ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர் குடும்பங்கள், மத்திய கிழக்கு உழைப்பாளர் குடும்பங்கள், பெண்கள் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவினர் தொடர்பில் நாம் விவாதிக்க உள்ளோம்.

இந்தப் பிரிவினருக்கு விசேட ஒதுக்கீடு அடிப்படைகளில் நிவாரணங்கள் வழங்க வேண்டும் என்பதும், சமுர்த்தி வாழ்வாதார உதவி பெருகின்றவர்களின் பட்டியல் அரசியல் தலையீடுகளினால், பாகுபாடு மிக்கதாக அமைத்துள்ளது என்றும், ஆகவே அந்தப் பட்டியல் உண்மையிலேயே நலிந்த பிரிவினரை உள்வாங்கும் முகமாக திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றும் நான் கோர விரும்புகின்றேன்.

எனது இந்த நிலைபாட்டை ஆதரிக்கும்படி நாடு முழுக்க வாழும் மக்கள், தாம் வாக்களித்து தெரிவு செய்த தமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூற வேண்டும் எனவும் கோருகின்றேன் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

